**மகளிர், குடும்பம், சமூக மேம்பாட்டு அமைச்சு**

**பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு திட்டச் செயல்முறை வழிகாட்டி**

**நோக்கம்**

*1.* இந்த வழிகாட்டி பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆதரவுத் திட்டங்கள் மற்றும் அனைத்துச் சமூகத்தினர்களிடையே பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை மேலோங்கச் செய்தல் போன்ற செயல்முறை வழிகாட்டுதல் வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பின்னணி**

*2.* பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புச் சட்டம் *2022 [*சட்டம் *840]*, பிரிவு 2 அடிப்படையில், பாலியல் துன்புறுத்தல் என்றால் பாலியல் இயல்பு கொண்டு ஒருவரின் மனத்தைப் புண்படுத்தும் அல்லது அவமதிக்கும் அல்லது அவர்களின் வளமான நல்வாழ்வுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் வாய்மொழிகள், வார்த்தைகள் இல்லாத, காட்சிகள், சைகைகள் அல்லது புறம் சார்ந்த ஏதாவது ஒரு வடிவங்களாலான எதிர்பாராத ஏதாவது ஒரு செயல்கள் என்று பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது.

*3.* பணியிடம், ஏதாவது ஒரு பொது அல்லது தனியார் கல்வி கூடங்கள் மற்றும் பொது இடங்கள் என்று பாலியல் துன்புறுத்தல் எங்கு வேண்டுமானாலும் நிகழலாம். இயங்கலை உட்பட எந்த வடிவத்திலும், பாலினம், வயது, இனம், அல்லது மதம் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு தனிநபருக்கும் பாலியல் துன்புறுத்தல் நிகழலாம்.

*4.* பாலியல் துன்புறுத்தல் சிக்கலுக்கு அவசியம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். காரணம் இது தாக்குதல் அல்லது பாலியல் வன்முறை உட்பட அச்சுறுத்தல் மற்றும் கற்பழிப்பு போன்ற தீவிரமான மற்றும் கடுமையான பாலியல் குற்றச் செயல்கள் நிகழ்வதற்கு வழிவகுக்கும். பாலியல் துன்புறுத்தல் சிறிய விவகாரம், அற்பமானது மற்றும் அவசியமற்றது என்று கருதப்படுவதில்லை. காரணம், இஃது எதிர்மறையான விளைவுகளை விளைவிக்கிறது. குறிப்பாக, பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சி, நடுக்கம், அச்சம் என்று உளவியல் சார்ந்த பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர். தொடர்ந்து, அவர்களின் அன்றாட கடமைகள், ஆற்றல், நல்வாழ்வு, வாழ்க்கை ஆகிய அனைத்தையும் பாதிக்கிறது.

*5.* இப்போது பாலியல் துன்புறுத்தல் தொடர்பான சிக்கல்களைக் கையாள்வதற்குச் சில சட்டங்கள் உள்ளன. தண்டனைச் சட்டம் *[*சட்டம் *574]* என்பது குற்றவியல் சட்டத்தின் கீழ் பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் சட்டங்களுள் ஒன்றாகும். இருப்பினும், பாலியல் துன்புறுத்தல் குறித்த திடமான பொருள் விளக்கம் இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படவில்லை. பெரும்பாலும் பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில் குற்றவியல் சட்டத்தின் கீழ் பாலியல் துன்புறுத்தல் செயல்களாகக் கருதப்படும் நடத்தைகளை நிரூபிக்க தேவைப்படும் ஒருவரின் தீங்கிழைக்கும் எண்ணம் அல்லது தீய நோக்கத்தின் சாட்சியங்களை நிரூபிப்பது மிகவும் கடினமாகும்; மிகவும் உயர்வான நிரூபனத்திற்குரிய சாட்சியங்கள் *(standard of proof)* அதாவது சந்தேகத்திற்கு இடமின்றிய சாட்சியங்களாக *(beyond reasonable doubt)* இருக்க வேண்டும். குற்றவியல் சட்டத்தின் கீழ் நிரூபனம் மற்றும் விசாரணைக்கு நீண்ட நேரம் கால அவகாசம் எடுக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு அல்லது குறிப்பிட்ட நிவாரணம் ஏதுமில்லை.

6. அதுமட்டுமின்றி, சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் சட்டம் 2017 [சட்டம் 792] பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்படும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் முழுப் பாதுகாப்பு வழங்குவதற்கும் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் தவறுகள் என்றால் குற்றச் செயல்களாகும் மற்றும் சட்டம் 574இன் கீழ் உள்ளபடியாகச் குற்றவியல் நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது.

7. தொடர்ந்து, தனியார் துறைக்குத் தொழிலாளர் சட்டம் 1955 [சட்டம் 265], அதே வேளையில் பொதுச் சேவைத் துறைக்குப் பொதுச் சேவை அதிகாரி விதிமுறைகள் (நடத்தை மற்றும் ஒழுங்கு) 1993 [P.U.(A) 395/1993] மற்றும் மனித வள சேவை சுற்றறிக்கை (MyPPSM), பிரிவு PO.3.1.2 அதாவது பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் சிக்கல்களைக் கையாளும் வழிகாட்டி வாயிலாக இப்போது பணியிடங்களில் நிகழும் பாலியல் துன்புறுத்தல் சிக்கலுக்குத் தீர்வுக் காணப்படுகிறது. 1 ஜனவரி 2023ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்ட புதுப்பிக்கப்பட்ட தொழிலாளர் சட்டம் 1955 [திருத்தம்] 2022 [சட்டம் A1651]இல் பிரிவு 81Hஇல் பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை மேலோங்கச் செய்வதற்கு பாலியல் துன்புறுத்தல் தொடர்பான அறிவிப்புகளைப் பணியிடங்களில் முதலாளிமார்கள் எந்நேரமும் கட்டாயம் காட்சிப்படுத்த வேண்டும் என்று சேர்க்கப்பட்டுள்ளது.

8. இருப்பினும், சட்டம் 265 என்பது தீபகற்ப மலேசியாவிலும் லாபுவான் கூட்டரசுப் பிரதேசத்திலும் நடைமுறையில் இருக்கும் சட்டமாகும். இதில் சபா, சரவாக் மாநிலங்கள் உட்படுத்தப்படவில்லை மற்றும் பாலியல் துன்புறுத்தல் வழக்குகள் மீதான விசாரணையைத் தொடரும் முடிவு முதலாளிமார்களின் பரிசீலனை மற்றும் விருப்பத்தைப் பொறுத்தது.

9. அதுமட்டுமின்றி, சிறு குற்றங்கள் சட்டம் 1955 [சட்டம் 336] பிரிவு 14இல் அநாகரிகம், அச்சுறுத்தும், அவமதிக்கும் சொற்களைப் பயன்படுத்துவோர் அல்லது அச்சுறுத்தும் அல்லது அவமதிக்கும் வகையில் நடந்துகொள்பவர் அல்லது அநாகரிகம், அவமதிக்கும் அல்லது அச்சுறுத்தும் ஓவியங்கள் மற்றும் எழுத்துகள் உள்ளடங்கிய தாள்களைக் காட்சிப்படுத்துவோர் அல்லது ஒட்டி வைப்போர் யாராகினும் அபராதம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

10. தொடர்பு மற்றும் பல்லூடக சட்டம் 1998 [சட்டம் 588] பிரிவு 233இல் மற்றவர்களைத் தொந்தரவு செய்தல், அச்சுறுத்துதல், துன்புறுத்துதல், புண்படுத்துதல் போன்றவற்றுக்காகத் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் வலையகச் சேவை அல்லது செயலிகள் சேவையைத் தவறாகப் பயன்படுத்திய குற்றத்திற்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11. அனைத்துச் சமூகத்தினர்களையும் உள்ளடக்கிய தற்போதுள்ள சட்டங்களுக்கும், கொள்கைகளுக்கும் மேலாக, பாலியல் துன்புறுத்தல் குற்றங்களுக்குத் தீர்வுக் காண்பதற்கு மாற்றுச் சட்டமாகச் சட்டம் 840 இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறப்பு நடுவர் மன்றம் சிவில் தன்மையுடைய மாற்று மன்றமாக விளங்கும். இது மிக விரைவாகவும் மற்றும் குறைந்த செலவுகளுடன் பாலியல் துன்புறுத்தல் புகார்களைக் கையாள்வதற்கு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, புகார்கள் சிவில் சட்டம் அடிப்படையில் கையாளப்படுகின்றன. புகார்களின் சாட்சியங்கள் சுமை என்பது நிகழ்தகவுகளின் சமச்சீர் நிலையை அடிப்படையாகக் கொண்டது மற்றும் பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிவில் வடிவத்தில் நஷ்ட ஈடு அல்லது நிவாரணம் வழங்கப்படும்.

**பாலியல் துன்புறுத்தலின் விளைவுகள் மற்றும் தாக்கங்கள்**

12. பாலியல் துன்புறுத்தல் எதிர்மறையான விளைவுகளையும் உளவியல், உடல் மற்றும் திறன் அம்சங்கள், ஆற்றல்கள் ஆகியவற்றை உட்படுத்திய நீடித்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. சமூகம்

பாலியல் துன்புறுத்தலை வழக்கமானதாகக் கருதுவதால் அதிகரிக்கும் பாலியல் துன்புறுத்தல் குற்றச் செயல்கள் ஆண் மற்றும் பெண் இடையிலான சமத்துவத்தைப் பாதிக்கிறது. தொடர்ந்து, இந்த நடத்தை நாட்டின் மேம்பாட்டிலும் ஒட்டுமொத்த சமூக வளப்பத்திலும் எதிர்மறையான விளைவுகளை விளைவிக்கும். இதில் தொடர்புடைய அனைவருக்கும் ஏற்படும் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் பின்வருமாறு:-

A. உணர்ச்சிகள்
   i. நிலையற்ற உணர்ச்சிகள் உட்பட தாக்கப்பட்ட மற்றும் அவமதிக்கப்பட்ட உணர்வு;
   ii. குறைந்த தன்முனைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதையை இழத்தல், நம்பிக்கை இழத்தல்;
   iii. தனிமைப்படுத்திக் கொள்ளுதல், உணர்வுகளை மறைத்தல் உள்ளிட்ட நடத்தை மாற்றங்கள்; மற்றும்
   iv. தன்னைச் சுற்றியுள்ள மக்களைச் சந்திப்பதற்கு அவமானபடுத்தல் மற்றும் வெட்கப்படுதல்.

B. உடல்
   i. பாதிக்கப்பட்டவர்கள் ஒருவேளை உறங்குவதற்குச் சிரமத்தை எதிர்கொள்வதாலும் மது மற்றும் போதைப் பொருளைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் ஆரோக்கியத்தில் தாக்கம் ஏற்படும்.
   ii. தொடர்ச்சியான மனக்கவலை மற்றும் உள்ளக் கிளர்ச்சி; மற்றும்
   iii. செறிவு மற்றும் ஊக்கம் இழத்தல்

C. நிதி
   i. நீண்ட காலத்திற்குப் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு செலவுகள்;
   ii. இனி வேலை செய்யாத பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் காத்தல்;
   iii. வழக்காடுதல் இருப்பின் சட்ட செலவுகள்; மற்றும்
   iv. முதலாளிமார்களுக்குப் புதிய ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கான செலவுகள்.

D. தொழில்
   i. ஆற்றலையும் பணி வருகைப் பதிவையும் பாதித்தல்;
   ii. வேலை வாய்ப்புகளைத் தவறவிடுதல் மற்றும் வேலை நிறுத்தம்; மற்றும்
   iii. சம்பந்தப்பட்ட பணியிடத்தில் எதிர்மறையான தோற்றத்தை/உருவகத்தை ஏற்படுத்துதல்.

**பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கட்டுக்கதைகள் மற்றும் உண்மைகள்**

13. சமூகத்தில் பெரும்பாலானவர்ளுக்குப் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான மிகவும் துல்லியமான அறிவு மற்று புரிதல் இல்லை. ஆகவே, அட்டவணை 1இல் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் உண்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

***அட்டவணை 1 பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கட்டுக்கதைகள் மற்றும் உண்மைகள்***

| எண் | கட்டுக்கதைகள் | உண்மைகள் |
|---|---|---|
| 1 | உடை உடுத்தும் முறை மற்றும் ஆபாசமான நடத்தை பாலியல் துன்புறுத்தல் ஏற்படுவதற்கு வழிவகுக்குகின்றன. | பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் புறத் தோற்றம், உடையின் வகை, வயது மற்றும் நடத்தை ஆகியவற்றால் ஈர்க்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| *2* | *பெண்கள் பாலியல் துன்புறுத்தலை விரும்பாததுபோல் பாசாங்கு செய்தாலும் அவர்களுக்குப் பாலியல் துன்புறுத்தல் என்பது சிறிய விடயம் மற்றும் கேளிக்கையானதாகும்.* | *பாலியல் துன்புறுத்தலுக்கும், துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் ஆகியோருக்கு இடையிலான பாலியல் உறவு அல்லது பாலியல் மீதான ஆர்வம் அல்லது சமூகம் ஆகியவற்றுக்கும் எந்தவொரு தொடர்ப்பும் இல்லை. அதிகாரம் கொண்ட அவர்கள் பாதிக்கப்பட்டவரைத் தாழ்த்துவதற்குப் பாலியல் துன்புறுத்தலைப் பயன்படுத்துகின்றனர்.* |
| *3* | *பாலியல் துன்புறுத்தல் இளம் பெண்களுக்கு மட்டுமே நிகழ்கிறது.* | *வயது, புறத்தோற்றம், திருமணத் தகுதி நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பெண்கள், ஆண்கள் என்று இருபாலருக்கும் பாலியல் துன்புறுத்தல் ஏற்படலாம்.* |
| *4* | *ஒருவேளை பாதிக்கப்பட்டவர் பாலியல் துன்புறுத்தலைப் புறக்கணிக்காவிட்டால் அல்லது அலட்சியப்படுத்தாவிட்டால் பாலியம் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் இந்தத் துன்புறுத்தலை நிறுத்திவிடுவார்.* | *ஒருவேளை பாதிக்கப்பட்டவர் எந்தவொரு நடவடிக்கையும் கையாளாமல் அல்லது புறக்கணிக்காமல் இருந்தால் பாலியல் துன்புறுத்தல் தொடர்ந்து நிகழும். இது துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் இதைத் தொடர்ந்து செய்வதற்குச் சம்மதம் அல்லது ஊக்குவிப்பதாகக் கருதப்படும்.* |
| *5* | *பாலியல் துன்புறுத்தல் நிகழ்வது அரிதாகும்.* | *பாலியல் துன்புறுத்தல் அடிக்கடி நிகழும் மற்றும் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையைப் பாதிக்கும்.* |
| *6* | *எதிர் பாலினத்தவரிடம் மட்டுமே பாலியல் துன்புறுத்தல் செய்யப்படும்.* | *சம பாலினங்களிடமும் பாலியல் துன்புறுத்தல் நிகழலாம்.* |
| *7* | *பாலியல் துன்புறுத்தல் குறித்த புகார் செய்வதற்குப் பாதிக்கப்பட்டவருக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.* | *பாதிக்கப்பட்டவர் அமைதியாக இருக்க அதிகம் விரும்புவர் மற்றும் புகார் செய்யமாட்டார்கள் காரணம், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் எதிர்மறையான கண்ணோட்டம் மற்றும் விளைவுகள் குறித்து கவலைபடுவர்.* |
| *8* | *பலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் வேண்டுமென்றே குற்றம் புரியவில்லை.* | *பாலியல் துன்புறுத்தல் என்பது வேண்டுமென்றே செய்கின்ற நடவடிக்கை மற்றும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் அதைச் செய்ய எண்ணம் கொண்டிருப்பார்.* |

***அதிகாரத்துவம்***

*14. பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புச் சட்டம் 2022 [சட்டம் 840]இன் பிரிவு 25இன் விதிகளின் அடிப்படையில் பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு திட்டச் செயல்முறை வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளன.*

***செயல்முறை***

*15. இந்த வழிகாட்டி பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு நிர்வாகத்தின் பங்களிப்புகள் மற்றும் பொறுப்புகள் பற்றி மிக விரிவாக விளக்குகின்றன. இதில் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அனைத்துச் சமூகத்தினர்களிடையே பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முதன்மை கவனம் செலுத்தும் ஆதரவுத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான மேலதிக விளக்கங்கள் அடங்கியுள்ளன. இந்தத் தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் சமூகத்தினர்களிடையே சமூக இயல்பு, பரஸ்பர மரியாதை மற்றும் நடத்தை உட்பட ஒருமைப்பாட்டின் மதிப்பை உயர்த்துதல் போன்ற புரிதலை அதிகரிக்கும் மற்றும் பாதுகாக்கும் முயற்சியில் அனைத்துத் தரப்பினருக்கும் கற்பித்தல் மற்றும் துல்லியமான அறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

***நிர்வாகி***

***ஆளுகை***

*16. மகளிர், குடும்பம், சமூக மேம்பாட்டு அமைச்சின் தலைமைச் செயலாளர் அவர்கள் பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு நிர்வாகத்தின் நிர்வாகி என்று பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு சட்டம் 2022 [சட்டம் 840]இன் பிரிவு 24இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகியான தலைமைச் செயலாளரின் செற்பாடுகள் மற்றும் பங்களிப்புகளை ஒருங்கிணைப்பதற்கும் உதவுவதற்கும் மகளிர் மேம்பாட்டுத் துறை பொறுப்பேற்றுள்ளது.*

***செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புகள்***

*17. நிர்வாகியின் செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புகள் பின்வருமாறு:-*

*(i) பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கை தொடர்பான வழிகாட்டிகளை வெளியிடுதல் அல்லது கொள்கைகளைச் சுருக்கிக் கூறுதல்;*
*(ii) பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கை தொடர்பான செயல்நடவடிக்கைகளை ஊக்குவித்தல்;*
*(iii) பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கை தொடர்பான அனைத்துக் கூறுகளையும் நிர்வகித்தல்; மற்றும்*
*(iv) இந்தச் சட்டத்தில் முறையான சீரமைப்பு மற்றும் செயல்முறைக்காக இதர செயற்பாடுகளைச் செயற்படுத்துதல்.*

***விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்கான ஆதரவுத் திட்டத்தின் செயல்திட்டம்***

*18. இந்தச் செயல்திட்டத்தில் ஒட்டுமொத்தமாகச் சமூகத்தின் நலன்களை இலக்காகக் கொண்டு பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் மற்றும் பொருத்தமான தீர்வு நடவடிக்கைகள் உள்ளடங்கியுள்ளது. இந்தச் செயல்திட்டத்தில் புதிய திட்டங்கள் / செயற்பாடுகளுக்கான பரிந்துரைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நடவடிக்கை மற்றும் விழிப்புணர்வைச் செயல்முறைப்படுத்துவதில் செயல்திறனை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள திட்டங்கள் அல்லது விதிமுறைகளை மேம்படுத்துவது ஆகியவை அடங்கும்.*

**தடுப்பு நடவடிக்கை**

*19. பாலியல் துன்புறுத்தலோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் செயற்படுத்தக்கூடிய தடுப்பு நடவடிக்கைகள் அட்டவணை 2இல் குறிப்பிடப்பட்டுள்ளன.*

**அட்டவணை 2 பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கை செயல்திட்டம்**

| எண் | வசதிகள் | தடுப்பு நடவடிக்கைகள் | மூலோபாய கூட்டு |
|---|---|---|---|
| *1* | பணியிடம் | *(i)* அவரவர் நிறுவனங்களில் நடைமுறைப்படுத்திய தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளை மேம்படுத்துவதற்கும் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதற்கும் சிறப்பு செயற்குழுவை நிறுவுதல்;<br><br>*(ii)* புதிய ஊழியர் நியமனம் மற்றும் சேவை வழங்குநர்/ ஒப்பந்ததாரர்களுக்குச் சேவை வழங்குதல் ஆகியவற்றில் குறிப்பிட்ட நிபந்தனைகள்/விதிகள் அமைப்பதன் மூலம் நெறிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iii)* நடைமுறையிலுள்ள நெறிமுறைகள்/ நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iv)* புகார் தொடர்புத் தளம் அல்லது பொருத்தமான ஏதேனும் தளத்தைத் தோற்றுவித்தல்;<br><br>*(v)* மகளிர், குடும்பம், சமூக மேம்பாட்டு அமைச்சு உருவாக்கிய விளக்கவுரை தொகுப்பினை அடிப்படையாகக் கொண்டு பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நடவடிக்கை தொடர்பான பட்டறையை நடத்துதல்;<br><br>*(vi)* பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்; | *(i)* மனித வள அமைச்சு<br><br>*(ii)* பொதுச் சேவைத் துறை<br><br>*(iii)* நியமிக்கப்பட்ட அதிகாரிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | *(vii)* புகார் நடைமுறைகள் மற்றும் நடவடிக்கை நெறிமுறைகளை மேம்படுத்துதல்; மற்றும்<br><br>*(viii)* அவ்வப்போது அறிவிப்பு/ நினைவூட்டல்/ விளம்பரம் செய்தல். | |
| *2* | பொதுப் போக்குவரத்து மற்றும் பொது வளாகம் | *(i)* குறிப்பாகப் ஆபத்துகள் நிறைந்த பகுதிகள், கழிவறை பகுதிகள், வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகிய பகுதிகளில் மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் உட்பட வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்;<br><br>*(ii)* ஆபத்துகள் நிறைந்த பகுதிகளில் விளக்குகள் வெளிச்சத்தை அதிகரித்தல்;<br><br>*(iii)* எளிமையாகப் புரிந்து கொள்ளக்கூடிய தகவல் வரைகலை வடிவத்திலான நினைவூட்டல் அறிவிப்புகளை முக்கியமான பகுதிகளில் ஒட்டுதல்;<br><br>*(iv)* உயர் தாக்கமுடைய பிரிவினருக்குச் சிறப்பு வாகன நிறுத்துமிடங்களை ஏற்படுத்தித் தருதல் மற்றும் அந்தச் செயல்முறையை நடைமுறைப்படுத்துதல்;<br><br>*(v)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(vi)* விரைவில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குத் தனியாக இருக்கைகள் / வண்டிகள் உருவாக்கி, அதன் செயல்முறையை உறுதிபடுத்துதல்;<br><br>*(vii)* அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்;<br><br>*(viii)* பாலின அடிப்படையில் | *(i)* போக்குவரத்து அமைச்சு<br><br>*(ii)* உள்ளூராட்சி மேம்பாட்டு அமைச்சு<br><br>*(iii)* சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டு அமைச்சு<br><br>*(iv)* உள்ளூர் அதிகாரி<br><br>*(v)* மலேசிய தொடர்பு, பல்லூடக ஆணையம்<br><br>*(vi)* அரசு சாரா அமைப்புகள் *(NGO)* |

| | | | |
|---|---|---|---|
| | | கழிவறைகளைச் சுத்தம் செய்யப் தூய்மைப் பணியாளர்களை ஊக்குவித்தல்;<br><br>*(ix)* முறையான இடத்தில் எச்சரிக்கை ஒலி எழுப்பியைப் பொருத்துதல்;<br><br>*(x)* திறன்பேசி வாயிலாக உதவிச் செயலிகளை உருவாக்குதல்;<br><br>*(xi)* இயங்கலை புகார் தளம் அல்லது ஏதேனும் பொருத்தமான தளங்களை உருவாக்குதல்; மற்றும்<br><br>*(xii)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல். | |
| 3 | சுகாதார வளாகம் | *(i)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல்;<br><br>*(ii)* பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்;<br><br>*(iii)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iv)* சிகிச்சை பெறுவோர் மற்றும் சுகாதார பணியாளர்களிடம் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கருத்தறி ஆய்வுகளை அவ்வப்போது மேற்கொள்ளுதல்;<br><br>*(v)* அட்டவணையில் சேர்க்கப்பட்ட மற்றும் குறிப்பிட்ட சிகிச்சைக்கு மட்டும் பாலின அடிப்படையில் சிகிச்சை அளிக்க சுகாதார பணியாளர்களை ஊக்குவித்தல்.<br><br>*(vi)* அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்; மற்றும்<br><br>*(vii)* குறிப்பாகப் ஆபத்துகள் நிறைந்த பகுதிகள், கழிவறை பகுதிகள், வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகிய | *(i)* சுகாதார அமைச்சு<br><br>*(ii)* உயர்க்கல்வி அமைச்சு<br><br>*(iii)* தற்காப்பு அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | பகுதிகளில் மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் உட்பட வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல். | |
| *4* | கல்விக் கூடங்கள் | *(i)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல்;<br><br>*(ii)* அடிப்படை தற்காப்பு கற்றுக் கொள்வதற்குத் தளம் ஏற்படுத்திக் கொடுத்தல்;<br><br>*(iii)* பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்;<br><br>*(iv)* பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் மாணவர்களைக் கண்டறிந்து இடையீடு திட்டத்தைச் செயல்படுத்துதல்;<br><br>*(v)* அவ்வப்போது பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கருத்தறி ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;<br><br>*(vi)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(vii)* பள்ளி நேரம் முழுவதும் பள்ளி பாதுகாவலர்களாகப் பணியாற்றுவதற்கு ஆண், பெண் என இருபாலினத்தவரையும் நியமித்தல்;<br><br>*(viii)* தாமதமாக இல்லம் திரும்பும் மாணவர்களுக்குச் சிறப்பு அறையை ஏற்படுத்தித் தருதல் தொடர்ந்து, அந்த அறையில் மறைகாணியைப் பொருத்துதல் (பள்ளிகளுக்கு)<br><br>*(ix)* அவ்வப்போது ரோந்து மேற்கொள்ளுதல்; | *(i)* கல்வி அமைச்சு<br><br>*(ii)* உயர்க்கல்வி அமைச்சு<br><br>*(iii)* இளைஞர், விளையாட்டு அமைச்சு<br><br>*(iv)* மனித வள அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | (x) அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்; மற்றும்<br><br>(xi) பாலியல் துன்புறுத்தல் சிக்கல்களை நிர்வகிப்பதற்கும் களைவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறை ஒன்றை பள்ளியில் பயன்படுத்துவதற்காக உருவாக்குதல் | |
| 5 | சிறுவர்கள்/முதியோர்கள்/ மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு மையம் | (i) புதிய ஊழியர் நியமனம் மற்றும் சேவை வழங்குநர்/ ஒப்பந்ததாரர்களுக்குச் சேவை வழங்குதல் ஆகியவற்றில் குறிப்பிட்ட நிபந்தனைகள்/விதிகள் அமைப்பதன் மூலம் நெறிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>(ii) மறைகாணியைப் பொருத்துதல் மற்றும் வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்;<br><br>(iii) பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்;<br><br>(iv) சிறுவர்கள்/ முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பாதுகாப்பதற்கென்று அதிகாரிகளை நியமித்தல்;<br><br>(v) மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் பாலினத்திற்கேற்பப் பராமரிப்பாளர்களையும் பாலின அடிப்படையில் தருவித்தல்;<br><br>(vi) அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்; மற்றும்<br><br>(vii) நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல். | (i) தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு<br><br>(ii) புறநகர், வட்டார மேம்பாட்டு அமைச்சு<br><br>(iii) சமூக நலத் துறை<br><br>(iv) அரசு சாரா அமைப்புகள் (NGO) |

| | | | |
|---|---|---|---|
| 6 | மறுவாழ்வு மையம்/ சிறைச்சாலை/ பாதுகாப்பு இல்லம் | (i) நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல்; மற்றும்<br><br>(ii) பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல். | (i) உள்துறை அமைச்சு<br><br>(ii) சமூக நலத் துறை |
| 7 | விளையாட்டுப் பயிற்சி மையம் | (i) நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல்;<br><br>(ii) பயிற்றுநர்களுக்கு விரிவான செய்பணி விளக்கங்களைக் கொடுத்தல்;<br><br>(iii) புதிய ஊழியர் நியமனம் மற்றும் சேவை வழங்குநர்/ ஒப்பந்ததாரர்களுக்குச் சேவை வழங்குதல் ஆகியவற்றில் குறிப்பிட்ட நிபந்தனைகள்/விதிகள் அமைப்பதன் மூலம் நெறிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>(iv) நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>(v) விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் வளப்பத்தைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு விளையாட்டு நிறுவனத்திலும் பயிற்சி பெற்ற அதிகாரிகளை நியமித்தல்;<br><br>(vi) அவ்வப்போது விளையாட்டு வீரர்களிடம் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான கருத்தறி ஆய்வை மேற்கொள்ளுதல்;<br><br>(vii) குறிப்பாகப் ஆபத்துகள் நிறைந்த பகுதிகள், கழிவறை பகுதிகள், வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகிய பகுதிகளில் மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் உட்பட வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி | (i) இளைஞர், விளையாட்டு அமைச்சு<br><br>(ii) தேசிய விளையாட்டு மன்றம்<br><br>(iii) மாநில விளையாட்டு மன்றம்<br><br>(iv) உள்ளூர் அதிகாரிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்;<br><br>*(viii)* அவ்வப்போது அறிவிப்புகள். நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்; மற்றும்<br><br>*(ix)* பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல். | |
| *8* | பொழுதுபோக்கு/கலை/கலாசார மையம் | *(i)* பொருத்தமான இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்.<br><br>*(ii)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iii)* அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்;<br><br>*(iv)* குறிப்பாகப் ஆபத்துகள் நிறைந்த பகுதிகள், கழிவறை பகுதிகள், வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகிய பகுதிகளில் மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் உட்பட வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்; மற்றும்<br><br>*(v)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல். | *(i)* தொடர்பு, இலக்கவியல் அமைச்சு<br><br>*(ii)* சுற்றுலா, கலை, பண்பாட்டு அமைச்சு<br><br>*(iii)* தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம் *(FINAS)*<br><br>*(iv)* உள்ளூர் அதிகாரிகள் |
| *9* | வணிக மையங்கள்/ தலங்கள் | *(i)* ஆபத்துகள் நிறைந்த இடங்களில் நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்.<br><br>*(ii)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iii)* மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் வழக்குகளில் | *(i)* உள்நாட்டு வாணிப மற்றும் வாழ்க்கை செலவின அமைச்சு<br><br>*(ii)* உள்ளூர் அதிகாரிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்;<br><br>*(iv)* அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்; மற்றும்<br><br>*(v)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல். | |
| *10* | சுற்றுலா/ மனமகிழ்வு மையங்கள் | *(i)* ஆபத்துகள் நிறைந்த இடங்களில் பல்வேறு மொழிகளிலான நினைவூட்டல் அறிவிப்புகளை ஒட்டுதல்;<br><br>*(ii)* நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் / நிறுவன விதிமுறைகளை மேம்படுத்துதல்;<br><br>*(iii)* அவ்வப்போது அறிவிப்புகள், நினைவூட்டல்கள், விளம்பரங்கள் செய்தல்;<br><br>*(iv)* மறைகாணியின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் வழக்குகளில் சாட்சியங்களை நிரூபிக்கும் நோக்கத்திற்காக மறைகாணி தரவுகளை நிர்வகிக்கும் வழிமுறைகளை உறுதிபடுத்துதல்;<br><br>*(v)* கண்காணித்தல், அவ்வப்போது ரோந்துகளை மேற்கொள்ளுதல்; மற்றும்<br><br>*(vi)* நடவடிக்கை நெறிமுறைகளையும் புகார் நடைமுறைமையையும் மேம்படுத்துதல். | *(i)* சுற்றுலா, கலை, பண்பாட்டு அமைச்சு<br><br>*(ii)* உள்ளூராட்சி மேம்பாட்டு அமைச்சு<br><br>*(iii)* உள்ளூர் அதிகாரிகள் |

விழிப்புணர்வு

*20.* சமுகத்தினரிடையே விழிப்புணர்வை மேலோங்க செய்வதே பாலியல் துன்புறுத்தலைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும். பாலியல் துன்புறுத்தலுக்கு வித்திடும் சில செயல்கள் பின்வருமாறு :

(i) *கட்டாயப் பாலியல் நடவடிக்கைக்கு உட்படுத்துதல், ஆபாசமான நகைச்சுவைகள், பாலியல் சார்ந்த விரிவான வெளிப்படையான பேச்சு, பாலியல் நடவடிக்கையைப் பற்றிய ஒருவரின் சுய அனுபவம் அல்லது கலந்துரையாடல்;*

(ii) *உற்றுப் பார்த்தல், முறைத்து பார்த்தல், கண்ணைச் சிமிட்டுதல், விசில் அடித்தல், உடலோடு உடலை உரசுதல் மற்றும் சங்கடத்தை உருவாக்கும் அநாகரிகக் கருத்துகளைக் கூறுதல்;*

(iii) *மனத்தைப் புண்படுத்தும் கருத்துகள் மற்றும் பாலியல், ஒருவரின் உடை மற்றும் தோற்றம் குறித்து பேசுதல்;*

(iv) *ஒருவரின் பாலினம் தொடர்பான மனத்தை புண்படுத்தும் அல்லது அவமதிக்கும் கருத்துகள்;*

(v) *பாலியல் தொடர்பான பொருள்கள் அல்லது படங்களை வெளிப்படையாகக் காட்சிப்படுத்துதல் அல்லது விநியோகித்தல்; மற்றும்*

(vi) *ஒருவரின் பாலுணர்வைத் தூண்டும் நகைச்சுவைகள், கருத்துகள் மற்றும் ஒருவரின் பாலியல் அனுபவத்தை வேறொருவருடன் பகிர்ந்து கொள்ள அச்சுறுத்துதல்.*

*21. பெரியோரிடையே பாலியல் தொடர்பான வெறுமனே நிகழும் தொடர்பாடுதலும் பாலியல் துன்புறுத்தல்களுள் ஒரு பகுதியாகும். ஆபாசம், பாலியல் கருத்துகள், சைகைகள் அல்லது பாலியல் நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும் சூழ்நிலைகள் போன்ற உள்ளடக்கம், படங்கள் இந்தத் தொடர்பாடலில் உள்ளடங்கும்.*

*22. ஒருவர் பாலியல் துன்புறுத்தலை மேற்கொள்ளாமலும், அதற்கு ஆளாகாமலும் இருப்பதற்குச் அட்டவணை 3இல் இடம்பெற்றிருக்கும் வழிமுறைகளைச் சமுகத்தினர்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.*

***அட்டவணை 3 பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்புக்கு உட்படுத்தியவர், பொறுப்பேற்கும் அதிகாரிகள் மற்றும் மூன்றாம் தரப்பினர்கள் கையாளும் வழிமுறைகள்***

| ***பாலியல் துன்புறுத்தலைத் தவிர்க்கும் வழிமுறைகள் (பாதிக்கப்பட்டவர், பாதிப்புக்கு உட்படுத்தியவர்)*** | |
|---|---|
| ***எண்*** | ***கூற்று*** |
| *1.* | *எந்தவொரு துன்புறுத்தலையும் தீவிரமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.* |
| *2.* | *பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருக்க தகுந்த வழிமுறைகள் அல்லது முன்னெடுப்புகளைக் கையாண்டு முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.* |
| *3.* | *பாதிக்கப்படுபவரின் உரிமைகளை அறிந்து கொள்ளவும் (குற்ற உணர்வு வேண்டாம்).* |
| *4.* | *பாலியல் துன்புறுத்தலை இயல்பானது எனக் கருதி கேலியாகவோ நகைச்சுவையாகவோ ஏற்கக்கூடாது.* |
| *5.* | *ஒழுங்குமீறிய நடத்தைக்கு யாரிடமும் இசைய வேண்டாம்.* |
| *6.* | *பாலியல் துன்புறுத்தலுக்கு வழிவகுக்கும் எந்த ஒரு செயலையும் தொடங்கக்கூடாது.* |
| *7.* | *ஒருவரின் புறத் தோற்றம் அல்லது உடல் வடிவம் தொடர்பான கருத்துகளைச்* |

| | |
|---|---|
| | சொல்லவோ அல்லது கேலி செய்யவோ வேண்டாம். |
| 8. | பாலியல் தொடர்பான கருத்துகளைத் தெரிவித்தல், கேலி, கிண்டல், உருவகம் அல்லது சைகை ஆகிய செயல்களைச் செய்யக்கூடாது. |
| 9. | ஆபாசமான அல்லது ஆபாசமான பொருளைத் தரக் கூடிய சொற்களைப் பயன்படுத்தக்கூடாது. |
| 10. | ஒருவருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் கருத்துகளைத் தெரிவிக்கக்கூடாது. |
| 11. | அனுமதி அல்லது தகுந்த காரணமின்றி ஒருவரைத் தொடக்கூடாது. |
| 12. | பாலியல் நடவடிக்கைக்கு வித்திடும் படங்கள், தகவல்கள் அல்லது பொருள்களைப் பகிரக்கூடாது. |
| 13. | பாலியல் துன்புறுத்தல் தொடர்பான செயல்களைப் பற்றி அறிந்து கொண்டு அச்செயல் நிகழாமல் தடுக்க வேண்டும். |
| **பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும்போது கையாள வேண்டிய நடவடிக்கை** | |
| **எண்** | **கூற்று** |
| 1. | விரைந்து செயல்பட வேண்டும் மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகும்போது அதை மறைக்கக்கூடாது. |
| 2. | பாதிப்புக்கு உட்படுத்துபவரை எச்சரித்து உடனடியாக அச்செயலை நிறுத்தும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். |
| 3. | துன்புறுத்தல் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் (நேரம், இடம், சாட்சி, என்ன நிகழ்ந்தது, உடை, அச்சு/மின்னியல் சான்றுகள்). |
| 4. | உடனடியாகப் பொறுப்பேற்கும் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும் அல்லது சிறுவர்களைத் தொடர்புபடுத்தியிருந்தால் பெற்றோர்கள்/பாதுகாவலர்களிடம் தெரிவிக்க வேண்டும். |
| 5. | எந்தவொரு சௌகரியமற்ற சூழல்களுக்கும் நிலைமைகளுக்கும் மறுப்பு சொல்ல வேண்டும். |
| 6. | மனத்தைப் புண்படுத்தும் செயல்களுக்கு மறுப்பு சொல்ல வேண்டும். |
| 7. | நம்பிக்கைக்குரிய நபர்களிடம் நிகழ்ந்தவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம். |
| 8. | நம்பிக்கைக்குரிய நண்பர்கள் அல்லது சுற்றத்தாரிடம் ஒவ்வொரு பாலியல் துன்புறுத்தல் நடவடிக்கைக்கும் சாட்சி கூற உதவி கேட்க வேண்டும். |
| **பாலியல் துன்புறுத்தல் புகாருக்குப் பிறகு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை (பாதிக்கப்பட்டவர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள்)** | |
| **எண்** | **கூற்று** |

| | |
|---|---|
| *1.* | *புகார் அளித்தவரின் விவரங்களை அதிகாரிகள் அவசியம் பாதுகாக்க வேண்டும்.* |
| *2.* | *துன்புறுத்தல் குறித்து புகார் அளிக்கும்போது வேறு எந்த நோக்கமுமின்றி நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.* |
| *3.* | *முறையான புகாருக்காகக் காத்திருக்காமல் தொடக்க விசாரணையைத் தொடங்க வேண்டும்.* |
| *4.* | *எவ்வித அனுமானமும் செய்யாமல் விசாரணையை வெளிப்படை தன்மை கொண்டதாகச் செய்ய வேண்டும்.* |
| *5.* | *தனிமைப்படுத்துதல், அவமானப்படுத்துதல் மற்றும் வேலை வாய்ப்புகளில் பாதிப்பை ஏற்படுத்துதல் போன்ற அநியாயமான செயல்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டும்.* |
| *6.* | *விசாரணை அதிகாரிகள் ஆண் பெண் என இருப்பாலினத்திலிருந்தும் பாதிக்கப்பட்டவர் மற்றும் பாதிப்புக்கு உட்படுத்தியவர் என யாருக்கும் சாதகமாகமில்லாமல் இருத்தல் வேண்டும்.* |

***பாதிக்கப்பட்டவரின் புகாரைச் செவிமடுக்குமாயின் மூன்றாம் தரப்பினர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் (எடுத்துக்காட்டு: நண்பர், சக ஊழியர் மற்றும் குடும்பம்)***

| ***எண்*** | ***கூற்று*** |
|---|---|
| *1.* | *முறையான புகார் அளிக்குமாறு பாதிக்கப்பட்டவரை அறிவுறுத்தவும்.* |
| *2.* | *அவசியம் இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும்; மற்றும் பாதிக்கப்பட்டவர் மற்றும் புகாரின் நம்பகத்தன்மை பாதிக்கும் வகையிலான செயல்களைச் செய்ய வேண்டாம்.* |
| *3.* | *அவதூறு மற்றும் தவறான புரிதலைத் தரும் என்பதால் அச்சு, மின்னியல் அல்லது சமூக ஊடகங்கங்களில் எவ்வித கதைகளையும் பகிர வேண்டாம்.* |
| *4.* | *நடைமுறையிலிருக்கின்ற விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளுக்கு ஏற்ப புகாரளிக்க பாதிக்கப்பட்டவருக்கு உதவவும்.* |
| *5.* | *பாதிக்கப்பட்டவர் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு உளவியல் மற்றும் மனநல ஆலோசனை பெற்றிட உதவவும்.* |
| *6.* | *பாதிக்கப்பட்டவருக்குப் பாதுகாப்பான இடம்/ சூழலை அமைத்துக் கொடுக்க உதவவும்.* |
| *7.* | *பாலியல் துன்புறுத்தலைப் பார்த்திருந்தால் தைரியமாகச் சாட்சி கூற முன் வரவும்.* |
| *8.* | *பாலியல் துன்புறுத்தலை உடனடியாக நிறுத்துதல் அல்லது பாதிப்புக்கு உட்படுத்தியவரைக் கண்டித்தல் வேண்டும்.* |

23. அமைச்சுகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சமூக நிலையில் பொறுப்பேற்கும் அதிகாரிகள், அரசு சார்பற்ற இயக்கங்கள் (NGO) மற்றும் அடையாளம் காணப்பட்ட இலக்கு மாற்றம் முகவர்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விழிப்புணர்வை மேலோங்க செய்வதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய முன்னெடுப்புகள் அட்டவணை 4இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4 பாலியல் துன்புறுத்தல் சார்ந்த விழிப்புணர்வுக்கான செயல்திட்டம்**

| எண் | கூற்று | விழிப்புணர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1. | சமூகத்தினரின் விழிப்புணர்வை மேலோங்கச் செய்தல் | (i) பாதுகாப்பாகவும் திறம்படவும் உதவுவதற்கும் ஈடுபடுவதற்கும் தனிநபர்களை ஊக்குவிக்கும் முகாம்களைச் செயற்படுத்துதல்;<br>(ii) சமூகத்திற்குக் கற்றுக் கொடுக்க ஓர் உதவிக் குழுவை உருவாக்குதல்;<br>(iii) விழிப்புணர்வு முகாம் செயற்படுத்துதல் மற்றும் பாதிப்பட்ட ஒருவர் தம் உரிமைகளைப் பற்றி தெளிவு பெற உதவுதல்;<br>(iv) சமூகத்திற்கு ஆதரவு கொடுத்தல்;<br>(v) சமூகம், அரசாங்க நிறுவனம் மற்றும் பொறுப்பேற்கும் அதிகாரிகளுக்கிடையே ஒத்துழைப்பு நல்குதல்;<br>(vi) வாய்மொழி அல்லது உடல்மொழிகளாலான பாலியல் துன்புறுத்தலைத் திடமாகவும் உண்மையாகவும் தடுக்க சமூகத்திற்குக் கற்றுத் தருதல்;<br>(vii) பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்படுபவர்களின் நிலைமையோடு எப்போதும் தொடர்புபடும் சண்டையிடுவது, ஓடுவது மற்றும் தற்காப்பது போன்ற பொதுவான நடத்தைகள் அனைத்து சூழ்நிலைகளுக்குப் பொருந்தாது எனும் புரிதலைச் சமூகத்திற்கு ஊட்டுதல்;<br>(viii) பாதிப்புக்கு உட்படுத்துவோருக்கான மறுவாழ்வு மையத்தை நிறுவுதல்;<br>(ix) பாலியல் நடவடிக்கைகளை விளம்பரப்படுத்துவதற்குப் பல்வேறு நெறிமுறைகள் மற்றும் தளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தினரிடம் ஏற்படுத்துதல்;<br>மற்றும்<br>(x) அனைவரையும் ஈடுபடுத்திய பாலியல் துன்புறுத்தல் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தினருக்கு வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| *2.* | சமூக பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்குப் பயிற்சி தளத்தை உருவாக்குதல் | (i) | பாலியல் துன்புறுத்தல் நடப்பதைக் கண்டறிந்து அதற்கு எதிராக இயங்கும் தன்னார்வலர்கள்/ சமூகத் தொண்டூழியர்களுக்குப் பயிற்சிகள் வழங்குதல்; |
| | | (ii) | பாதுகாவலர்கள், உதவி காவலர்கள், பேருந்து உதவி பணியாளர், கடை உதவியாளர் மற்றும் விமானப் பணிப்பெண் போன்ற சேவைகள் வழங்கும் ஊழியர்களுக்குப் பாலியல் துன்புறுத்தல் சார்ந்த புகாரைப் பெற்றதும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அறிவைப் பெறுவதற்காகப் பயிற்சிகள் வழங்குதல்; மற்றும் |
| | | (iii) | பாலியல் துன்புறுத்தலைப் பற்றி தெளிவு கொண்ட உதவி கட்டமைப்பு குழுவை நிறுவ வேண்டும். இக்குழுப் பாதிக்கப்பட்டவரின் கண்ணோட்டத்தில் பாலியல் துன்புறுத்தல் சிக்கல்களைப் புரிந்து கொண்டு இச்சிக்கலைச் செவிமடுப்பவராகச் செயற்படும். மேலும், இது குறித்து புகார் செய்யவும் அதிர்ச்சியிலிருந்து மீளவும் உதவும். |
| *3.* | சிறுவர்களுக்குப் பாதுகாப்பான தொடுதல் பாதுகாப்பற்ற தொடுதல் பற்றிய விழிப்புணர்வு | (i) | பாலியல் துன்புறுத்தலுக்கான மூலக் காரணத்தைப் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கையைச் செயற்படுத்துதல்; |
| | | (ii) | இனப்பெருக்கம் மற்றும் சமூகவியல் தொடர்பான பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்; |
| | | (iii) | ஆதரவான நிகழ்ச்சிகளை நடத்துதல் |
| | | (iv) | சிறுவர்களுக்குப் பாதுகாப்பான தொடுதல் பாதுகாப்பற்ற தொடுதல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்குப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துதல்; மற்றும் |
| | | (v) | இயங்கலை விளையாட்டு / செயலி, வலையொளி மற்றும் சமூக ஊடகம் வாயிலாக நிகழும் பாலியல் துன்புறுத்தல் முறைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். |
| *4.* | விளம்பரங்கள் மற்றும் பரப்புரை | (i) | அச்சு, மின்னியல் மற்றும் சமூக ஊடங்கங்கள்வழி தொடர்ச்சியாக விளம்பரங்கள்/பரப்புரை செய்தல். |

**நடைமுறைப்படுத்திய திகதி**

*24.* இந்தச் செயல்முறை வழிகாட்டி *28* மார்ச் *2023*ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

*25.* அந்தத்த பொறுப்பேற்கும் அதிகாரிகளுக்கு உட்பட்டது. இந்தச் செயல்முறை வழிகாட்டி ஒட்டுமொத்தமாக மாநில அரசாங்க ஊழியர்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சட்டப்பூர்வ அதிகாரிகள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் விரித்துரைக்கப்படுகிறது.

*தலைமைச் செயலாளர்*

*மகளிர், குடும்பம், சமூக மேம்பாட்டு அமைச்சு*

*28 மார்ச் 2023*

*பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள்/ விதிமுறைகளின் பட்டியல்*

*A. சிறுவர்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரின் உரிமைகளையும் பாதுகாத்தல்*

(i) *பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புச் சட்டம் 2022 [சட்டம் 840]*

(ii) *சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் சட்டம் 2017 [சட்டம் 792]*

(iii) *தண்டனைச் சட்டம் [சட்டம் 574]*

(iv) *தொடர்பு மற்றும் பல்லூடகச் சட்டம் 1998 [சட்டம் 588]*

(v) *சிறு குற்றங்கள் சட்டம் 1955 [சட்டம் 336]*

*B. ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்*

*(i) பொதுச் சேவை அதிகாரி விதிமுறைகள் (நடத்தை மற்றும் ஒழுங்கு) 1993 [P.U.(A) 395/1993]*

*(ii) மனித வள சேவை சுற்றறிக்கை (MyPPSM), பிரிவு PO.3.1.2 பணியிடப் பாலியல் துன்புறுத்தல் சிக்கல்களைக் கையாளும் செயல்முறை வழிகாட்டி*

*(iii) சட்டப்பூர்வ அமைப்புகள் (ஒழுக்கம் மற்றும் கூடுதல் கட்டணம்) சட்டம் 2000 [சட்டம் 605]*

*(iv) தொழிலாளர் சட்டம் 1955 [சட்டம் 265]*

*(v) பெருநிறுவன உறவுகள் சட்டம் 1967 [சட்டம் 177]*

*(vi) பாதுகாப்பு மற்றும் ஊழியர் சுகாதாரச் சட்டம் 1994 [சட்டம் 514]*

*(vii) பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான மற்றும் ஒழிப்பதற்குமான நெறிமுறைகள் 1999*

A. பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புத் திட்டத்தின் சின்னம்

B. பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புத் திட்டத்தின் முழக்கம்

#HentikanGangguanSeksual

அடிக்கடி வினவும் வினாக்கள்

1. பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன?
பாலியல் துன்புறுத்தல் என்றால் பாலியல் இயல்பு கொண்டு ஒருவரின் மனத்தைப் புண்படுத்தும் அல்லது அவமதிக்கும் அல்லது அவர்களின் வளமான நல்வாழ்வுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் வாய்மொழிகள், வார்த்தைகள் இல்லாத, காட்சிகள், சைகைகள் அல்லது புறம் சார்ந்த ஏதாவது ஒரு வடிவங்களாலான எதிர்பாராத ஏதாவது ஒரு செயல்கள் என்று பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. பாலியல் துன்புறுத்தல் எடுத்துக்காட்டுகள் யாவை?
(i) சொற்கள், கருத்துகள், நகைச்சுவைகள், கிண்டல்கள், ஒலிகள் மற்றும் அச்சுறுத்தல்கள் அல்லது பாலியல் பரிந்துரைகள் வடிவிலான கேள்விகள்;
(ii) பாலியல் எண்ணம் அல்லது விருப்பத்தின் குறிப்பைக் கொடுக்கும் தோற்றம் அல்லது பார்வை போன்ற வார்த்தைகள் இல்லாத நடவடிக்கை;
(iii) மின்னியல் ஊடகங்கள், இயங்கலை அல்லது நேரடியாகப் பாலியல் தொடர்பான செய்திகள், படங்களைப் பகிர்தல் அல்லது காண்பித்தல்;
(iv) பாலியல் அல்லது பிற தொடர்புடைய செயலைக் குறிக்கும் சைகைகளைப் பயன்படுத்துதல்; மற்றும்
(v) அசௌகர்யமான உணர்வை ஏற்படுத்தும் மிக நெருக்கமான அனைத்து வகையிலான உடற்செயற்பாடுகள்.

3. பாலியல் துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டவர் எதிர்நோக்கும் விளைவுகள் யாவை?
பாலியல் துன்புறுத்தல் பாதிக்கப்பட்டவருக்கு எதிர்மறையான விளைவுகளையும் உளவியல், உடல் மற்றும் திறன் அம்சங்கள், ஆற்றல்கள் ஆகியவற்றை உட்படுத்திய நீடித்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

4. பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் யாவை?
(i) பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் புறத் தோற்றம், உடையின் வகை, வயது மற்றும் நடத்தை ஆகியவற்றால் ஈர்க்கப்படவில்லை;
(ii) வயது, புறத்தோற்றம், திருமணத் தகுதி நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பெண்கள், ஆண்கள் என்று இருபாலருக்கும் பாலியல் துன்புறுத்தல் ஏற்படலாம்;
(iii) ஒருவேளை பாதிக்கப்பட்டவர் எந்தவொரு நடவடிக்கையும் கையாளாமல் அல்லது புறக்கணிக்காமல் இருந்தால் பாலியல் துன்புறுத்தல் தொடர்ந்து நிகழும். இது துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் இதைத் தொடர்ந்து செய்வதற்குச் சம்மதம் அல்லது ஊக்குவிப்பதாகக் கருதப்படும்;
(iv) சம பாலினங்களிடமும் பாலியல் துன்புறுத்தல் நிகழலாம்; மற்றும்
(v) பாலியல் துன்புறுத்தல் என்பது வேண்டுமென்றே செய்கின்ற நடவடிக்கை மற்றும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவர் அதைச் செய்ய எண்ணம் கொண்டிருப்பார்.

5. பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குபவர்கள், அவ்வாறு செய்வதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

(i) பாலியல் தொடர்பான கருத்துப் பதிவுகள், அவமதித்தல், கேலி, கிண்டல், உருவகம் அல்லது சைகை ஆகியவற்றை செய்யக்கூடாது;

(ii) ஒருவருக்குச் சங்கடத்தை மற்றும் அசௌகர்யத்தை ஏற்படுத்தும் கருத்துகளைத் தெரிவிக்கக்கூடாது;

(iii) பாலியல் நடவடிக்கைக்கு வித்திடும் படங்கள், தகவல்கள் அல்லது பொருள்களைப் பகிரக்கூடாது;

(iv) பாலியல் துன்புறுத்தலுக்கு வழிவகுக்கும் எந்த ஒரு செயலையும் தொடங்கக்கூடாது; மற்றும்

(v) அனுமதி அல்லது தகுந்த காரணமின்றி ஒருவரைத் தொடக்கூடாது.

6. பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

(i) பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருக்க தகுந்த வழிமுறைகள் அல்லது முன்னெடுப்புகளைக் கையாண்டு முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்;

(ii) பாலியல் துன்புறுத்தலை நகைச்சுவை அல்லது கேலி கிண்டல் எனக் கருதி வழக்கமானதாகப் பார்க்காமல் தீவிரமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும்; மற்றும்

(iii) பாதிக்கப்படுபவர் தம் உரிமைகளை அறிந்திருக்க வேண்டும்.

7. பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்படுபவராயின் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

(i) விரைந்து செயல்படுதல் மற்றும் உடனடியாகப் பொறுப்பேற்கும் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்;

(ii) பாதிப்புக்கு உட்படுத்துபவரை எச்சரித்து உடனடியாக அச்செயலை நிறுத்தும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்;

(iii) துன்புறுத்தல் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்து, தொடர்புடைய நிரூபனங்களைப் பாதுகாக்க வேண்டும்;

(iv) எந்தவொரு சௌகரியமற்ற சூழல்களுக்கும் நிலைமைகளுக்கும் அல்லது மனத்தைப் புண்படுத்தும் செயல்களுக்கு மறுப்பு சொல்ல வேண்டும்; மற்றும்

(v) நம்பிக்கைக்குரிய நபர்களிடம் பகிரவும்.

8. புகார் கிடைத்த பிறகு, பாதிக்கப்பட்டவர் மற்றும் அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும்?

(i) புகார் அளித்தவரின் விவரங்களை அதிகாரிகள் பாதுகாக்க வேண்டும்;

(ii) துன்புறுத்தல் குறித்து புகார் அளிக்கும்போது வேறு எந்த நோக்கமுமின்றி நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்;

(iii) விசாரணையைத் தொடங்குதல் மற்றும் எவ்வித அனுமானமும் செய்யாமல் விசாரணையை வெளிப்படை தன்மை கொண்டதாக மேற்கொள்ள வேண்டும்;

(iv) தனிமைப்படுத்துதல், அவமானப்படுத்துதல் மற்றும் அவமதித்தல் போன்ற அநியாயமான செயல்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டும்; மற்றும்

(v) நியாயமான முடிவுக்கு ஒரு விசாரணைக் குழுவில் ஆண் பெண் என இருப்பாலினத்திலிருந்தும் அதிகாரிகள் ஈடுப்படுத்திருக்க வேண்டும்.

**9.** ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருப்பதை அறிந்தால் நண்பர்கள், குடும்பம் போன்ற மூன்றாம் தரப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்?

(i) முறையான புகார் அளிக்குமாறு பாதிக்கப்பட்டவரை அறிவுறுத்தவும்;

(ii) அவசியம் இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும்; மற்றும் பாதிக்கப்பட்டவர் மற்றும் புகாரின் நம்பகத்தன்மை பாதிக்கும் வகையிலான செயல்களைச் செய்ய வேண்டாம்;

(iii) பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்தும் மற்றும் அவரின் நம்பகத்தன்மையை சீர்குலைய செய்யும் எவ்வித கதைகளையும் பகிர வேண்டாம்;

(iv) நடைமுறையிலிருக்கின்ற விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளுக்கு ஏற்ப புகாரளிக்க பாதிக்கப்பட்டவருக்கு உதவவும்;

(v) பாதிக்கப்பட்டவர் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு உளவியல் மற்றும் மனநல ஆலோசனை பெற்றிட உதவவும்;

(vi) பாதிக்கப்பட்டவருக்குப் பாதுகாப்பான இடம்/ சூழலை அமைத்துக் கொடுக்க உதவவும்;

(vii) தைரியமாகச் சாட்சி கூற முன் வரவும்; மற்றும்

(viii) பாலியல் துன்புறுத்தல் நிகழ்வதைப் பார்த்தல் பாதிப்புக்கு உட்படுத்துபவரை எச்சரித்து உடனடியாக அச்செயலை நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளவும்.

**10.** பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புச் சட்டம் **2022** [சட்டம் **840**] தவிர்த்து, பாதிக்கப்பட்டவரைப் பாதுகாக்கும் இதர தொடர்புடைய சட்டங்கள் யாவை?

(i) சிறுவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் சட்டம் **2017** [சட்டம் **792**];

(ii) தண்டனைச் சட்டம் [சட்டம் **574**];

(iii) தொடர்பு மற்றும் பல்லூடகச் சட்டம் **1998** [சட்டம் **588**];

(iv) சிறு குற்றங்கள் சட்டம் **1955** [சட்டம் **336**];

(v) பொதுச் சேவை அதிகாரி விதிமுறைகள் (நடத்தை மற்றும் ஒழுங்கு) **1993** [***P.U.(A) 395/1993***];

(vi) மனித வள சேவை சுற்றறிக்கை **(MyPPSM)**, பிரிவு **PO.3.1.2** பணியிடப் பாலியல் துன்புறுத்தல் சிக்கல்களைக் கையாளும் செயல்முறை வழிகாட்டி;

(vii) சட்டப்பூர்வ அமைப்புகள் (ஒழுக்கம் மற்றும் கூடுதல் கட்டணம்) சட்டம் **2000** [சட்டம் **605**];

(viii) தொழிலாளர் சட்டம் **1955** [சட்டம் **265**];

(ix) பெருநிறுவன உறவுகள் சட்டம் **1967** [சட்டம் **177**];

(x) பாதுகாப்பு மற்றும் ஊழியர் சுகாதாரச் சட்டம் **1994** [சட்டம் **514**];

(xi) பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான மற்றும் ஒழிப்பதற்குமான நெறிமுறைகள் **1999.**